## மன்றப் பொருள்

2021ம் ஆண்டு ஆகஸ்ட் 31.08.2021ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு. ஜெ.இரவி,**
**தனி அலுவலர்**

1. ஆணையர் (பொ) அவர்களின் ஆகஸ்ட் 2021ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

2. பண்ருட்டி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வருகை பதிவேட்டினை உறுதி செய்யும் விதமாக Bio-Metric முறையிலான Finger And Face Bio –Metric devices பழுது ஏற்பட்டு இயங்காத நிலையில் உள்ளது. ஆதனை பழுது நீக்கி சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 72,000/–த்தை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

   **அலுவலகக் குறிப்பு:-**
   1. மன்றம் அனுமதிக்கலாம்
   2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
   3. மேற்கண்ட பணிக்கு முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

   **கோ. எண் 1364/இ1/2021**

3. பண்ருட்டி நகராட்சி அலுலவகத்தில் பாதுகாப்பு நலன் கருதி 5 இடங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளது. அதனை சரிசெய்தும் மற்றும் புதிய கேமிராக்கள் பொருத்தவும் உத்தேச செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

   **அலுவலகக் குறிப்பு:-**
   1. மன்றம் அனுமதிக்கலாம்
   2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
   3. மேற்கண்ட பணிக்கு முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

   **கோ.எண் 1404/இ1/2021**

4. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 அ. மணிநகர் மற்றும் வார்டு எண்.28 விஸ்வநாதன் நகர் பகுதியில் துாய்மை இந்தியா திட்டம் 2018–2019 / 8th SHPC திட்டத்தின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5 அவர்களின் ந.க.எண்.பி3/1191/2019, நாள்21.01.2019 கண்டுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு 01.03.2019 அன்று வழங்கப்பட்டது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | செலவினம் ரூ. இலட்சத்தில் | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–11 அ.மணிநகர் பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC Centre) அமைத்தல். | 58.00 | 5.10 | ஆழ்துளை கிணறு பணி முடிவுற்றது, உரக்குடில் மற்றும் சுற்று சுவர் பணிக்கு அடித்தளம் அமைக்கும் நிலையில் பொது மக்கள் எதிர்ப்பால் பணிகள் தொடர இயலாத நிலை உள்ளது. |
| 2. | வார்டு–28 விஸ்வநாதன் நகர் பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC Centre) அமைத்தல். | 58.00 | 0.00 | சுற்று சுவர் பணிக்கு அடித்தளம் அமைக்கும் நிலையில் பொது மக்கள் எதிர்ப்பால் பணிகள் தொடர இயலாத நிலை உள்ளது. |
| | **மொத்தம்** | **116.00** | **5.10** | |

மேலும், இவ்வலுவலக கடித ந.க.எண்.3432/2018/இ1, நாள்.08.03.2021 கண்டுள்ள கடிதத்தின்படி, இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேற்கண்ட இரு பணிகளையும் அப்பகுதி பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதாலும் மற்றும் சேகரிக்கப்படும் 10.50 மெட்ரிக் டன் மக்கும்

கழிவுகளை நுண்ணுயிர் உரமாக்க போதுமான அளவு கொள்ளளவு கொண்ட MCC மற்றும் OCC மையங்கள் இருப்பதாலும், மேற்கண்ட இருபணிகளையும் கைவிட உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2289/2019/பி3–1, நாள்.25.03.2021 கண்டுள்ள கடிதத்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 மணி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 30 MTPD Capacity Proceesing Plant மூலம் கெடிலம் ஆற்றுப்படுகையில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கொட்டப்பட்டுள்ள குப்பை கழிவுகளை Bio Mining மூலம் அகற்ற உத்திரவிடப்பட்டது. அதன்படி, மேற்கண்ட ஆற்றுப்படுகையில் கொட்டப்பட்டுள்ள ஈரக்கழிவுகளின் கொள்ளவை Quantity Survey செய்து கொள்ளளவு சுமார் 14426.495 கனஅளவு என கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், அண்ணா பல்கலைகழகம், சென்னை அறிக்கை ந.க.எண்.0051/DIR/CES/Panruti Municipality-DPR-2021-22, நாள்.17.07.2021 அறிக்கையின்படி, மேற்கண்ட கொள்ளளவை அண்ணா பல்கலைகழகம், சென்னை–25 கல்லூரி மூலம் சரிபார்க்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டள்ளது. அதில் மேற்கண்ட Proceesing Plantல் உள்ள இயந்திரங்களை Bio Mining முறைக்கு ஏற்ப மாற்றி கழிவுகளை அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. ஆனால் தற்போது மேற்கண்ட 30 MTPD Capacity Proceesing Plant மூலம் இந்நகராட்சியில் அன்றாடம் பெறப்படும் ஈரக்கழிவுகளை உரமாக்கும் பணிக்கு பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, மேற்கண்ட இருப்பணிகளின் மொத்த மதிப்பீட்டு தொகையான ரூ.116.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.5.10 இலட்சத்திற்கான ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்கும் தருவாயில் உள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் (ம) மண்டல இயக்குநர் செங்கற்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.3666/2018/பி1, நாள்.19.07.2021 படி, மீதமுள்ள திட்ட நிதியின் தொகையில் கெடிலம் ஆற்றுப்படுகையில் கொட்டப்பட்டுள்ள குப்பை கழிவுகளுக்கு அருகில் புதியதாக Bio Mining முறைக்கேற்ப இயந்திரங்கள் அமைத்து கழிவுகளை அகற்ற உத்தேச மதிப்பீடு ரூ.113.00 இலட்சத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்தமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட இரண்டு பணிகளின் நிர்வாக அனுமதியை ரத்து செய்தும் Bio Mining பணிக்கு மேற்கண்ட மீதமுள்ள திட்ட நிதியுடன் கூடுதலாக ஆகும் தொகையை இந்நகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.1829 / இ1 / 2021**

5. அரசாணை எண் 238 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந4) நாள் 01.10.1997 ல் தமிழ்நாடு நகராட்சிப்பணி ஓட்டுநர் பணியிடத்தில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்தற்காக தமிழக அரசு வழங்கும் தங்கப்தக்கம் மற்றும் நற்சான்று வழங்கக் கோரியுள்ளது.

அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 24817/ஜே3/2020 நாள் 13.07.2021, 20 ஆண்டுகள் ஓட்டுநராக மாசற்ற மறையில் பணிபுரிந்த அலுவலர் பெயர் திரு.ரியாஸ்அகமது அவர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் கைத்திறன் தொழிலாளர்கள் வளர்ச்சி கடிதம் அண்ணாசாலை – 2 விலைவிகிதம் வழங்கப்பட்டுள்ளது. விலைவிகிதம் ரூ.25,500 விலைப்புள்ளி அளித்துள்ளார். இவ் உத்தேச செலவின்தததை மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** 1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோ.எண் : 1953 / பி2 / 2021</u>**

6. பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு குப்பை அகற்ற பயன்படும் டிப்பர் லாரி TN 31 AF 8169 தகுதி சான்று பெறுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தயாரிப்பு நிறுவனமான ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் மற்றும் ஏஜென்சி பி. லிட்., விழுப்புரம் பணிமனையில் பண்ருட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். 1905/2019 /எச்1, துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் குறிப்பு நாள். 09.09.2019 அவர்களின் குறிப்பின்படி மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி பெற்று உத்தேச செலவினம் ரூ.1.25 லட்சம் செலவினத்திற்கு மன்றம் தனது தீர்மான எண். 438/30.09.2019 மூலம் அனுமதி பெற்று வண்டியை கடந்த 08.11.2019–ல் ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ்–ல் விடப்பட்டது. இதனை தொடர்ந்து 2020, 2021–ல் கொரோனா அதனை தொடர்ந்து வர்தா, நிவர் புயல்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல்

பணி, கொரோனா இரண்டாம் அலை ஆகியவற்றின் காரணமாக வண்டியை ஜூன் 2021 வரை மேற்கண்ட ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் பிரைவேட் லிட்., என்ற நிறுவனத்திலிருந்து எடுக்க முடியவில்லை. தற்பொழுது அந்த வண்டியை உரிய தொகை செலுத்தி தகுதி சான்று பெற எடுத்து வரப்பட்டது. மேற்கண்ட எச்சர் வண்டி எண். TN 31 AF 8169 ஐ தகுதி சான்று பெற மேற்கண்ட ஜெயலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ் பிரைவேட் லிட்., என்ற நிறுவனத்தில் விடப்பட்டதற்கும், மீண்டும் அங்கிருந்து எடுத்து வரப்பட்டதற்கும் இடையேயான காலம் சுமார் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இதனால் கடந்த 09.09.2019 அன்று தகுதி சான்றுக்காக ஓட்டுனரின் குறிப்பிட்டுள்ளபடி உள்ள பழுதுகள் சரி செய்யப்பட்டாலும், அவ்வாகனத்தின் பேட்டரி, பிரேக் பூஸ்டர், ஹைட்ராலிக், கியர் பாக்ஸ் டாப், ஹைடிராலிக் கேபிள், ஜாயிண்ட் மற்றும் அநேக ஒயரிங் பழுதடைந்து விட்டது. அதனால், எடுத்து வந்த வண்டியை தற்போது தகுதி சான்றுக்கு அனுப்ப இயலவில்லை. எனவே, பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட வண்டியை செயலாக்கத்திற்கு கொண்டு வருவதற்கு 02.06.2021 அன்று ஓட்டுனர் கொடுத்த குறிப்பின்படி அதில் உள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்வதற்கும், வண்டிக்கு பேட்டரி, ஸ்டிக்கர் ஒட்டி தகுதி சான்றுக்கு கொண்டு செல்ல தேவைப்படும் தோராய செலவினம் ரூ. 25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) த்தை பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன்கருதி பிரிவு 15–ன்கீழ் செலவினம் மேற்கொண்டு மன்றத்தின் அனுமதி பெற்றதில் மேற்கொண்டு தகுதி சான்று முழுமை பெறுவதற்கு ஸ்டிக்கர், ஸ்பீடு லைனர், புகை சான்று, RTO அனுமதி செலவு செய்வதற்கு மேற்கொண்டு ஆகும் தோராய செலவினமாக ரூ.25,000/–த்தை மன்றத்தின் அனுமதிக்கும் உள்ளூர் ஆட்டோ ஒர்க்ஸில் விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி மற்றும் ஆணையரின் உத்திரவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். 1905/2021/எச்1**

7. பண்ருட்டி நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள் அம்மா உணவக டோக்கன்கள் மற்றும் இரசீதுகள் மற்றும் நகரமைப்பு பிரிவிற்கு தேவையான பதிவேடுகள், சொத்துவரி சீராய்வு படிவங்கள் வாங்கியமைக்க திருச்சி, தமிழ்நாடு மல்டிபர்பஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க தோராய செலவினத் தொகை ரூ 2,00,000/– யை வருவாய் நிதி கணக்கிலிருந்து செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்

**கோ.எண் : 1953/பி2/2016**

8. பண்ருட்டி நகராட்சியில் தமிழ்நாடு அரசின் 100 நாள் சாதனையான தினகரன், நாளிதழில் விளம்பரம் செய்தமைக்காக ரூ16,001/– வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் : 2151 /சி1 /2021**

9. பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1 நந்தனார் காலணி, வி.ஆண்டிக்குப்பம், வார்டு எண்: 3 வ.ஊ.சி நகர், விழமங்கலம் மற்றும் வார்டு எண்: 27 காந்தி நகர், தட்டாஞ்சாவடி ஆகிய இடங்களில் உள்ள கழிப்பறைகளின் பழுதடைந்த பீங்கான்கள், கதவுகள், பைப்லைன், பழுதடைந்த மின்வசதி சரிசெய்தல், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயாரிக்கபபட்ட உத்தேச மதிப்பீடு ரூ 59.0 இலட்சத்தை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ.எண் 1241/இ1/2021**

10. பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 தண்டுபாளையம், வார்டு எண்: 21 காமராஜர் நகர் (பேருந்து நிலையம்) வார்டு எண்:11 ரயில்வே காலணி, வார்டு எண்: 33 இராசாபாளையம், வார்டு எண்: 16 திருவதிகை (வாட்டர் டேங்க் அருகில்) ஆகிய இடங்களில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறைகளில் பழுதடைந்த இரும்பு கதவுகள், பீங்கான்கள், மின்விளக்குகள், பைப்லைன், தரைதளம் வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணிகளுக்கு தாயரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ. 5.50 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ.எண் 1241–2/இ1/2021**

11. பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28 அய்யனார் கோவில் பாட்டை (நகராட்சி அலுவலகம் அருகில்) வார்டு எண் 28, அய்யனார் கோவில் பாட்டை (கோவில் அருகில்) வார்டு எண் 28 களத்துமேடு ஆகிய இடங்களில் உள்ள கழிப்பறைகளில் பழுதடைந்த பீங்கான்கள் (IWC), மின் வசதிகள், பைப்லைன், Tap, இரும்பு கதவுகள் மாற்றியமைத்தல், வர்ணம் பூசி புதுப்பித்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ5.75 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

<u>கோ.எண் 1241–1/இ1/2021</u>

12. பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் பருவமழை காலங்களில் பொழியும் மழைநீர் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்த JCB இயந்திரம் வாடகை முறையில் அமர்த்தவும், மழைகாலங்களில் மின் துண்டிப்பு ஏற்படும் நேரங்களில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய வாடகை முறையில் GENSET அமைக்கவும், நிவாரன முகாம்களில் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு கொம்புகள் கொண்டு தடுப்புகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு தாயரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ3.00 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பிடுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

<u>கோ.எண் 2079/இ1/2021</u>

13. இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வருகை பதிவேட்டினை உறுதி செய்யும் விதமாக Bio-Metric முறையிலான Finger And Face Bio –Metric devices பழுது ஏற்பட்டு இயங்காத நிலையில் அதனை சரி செய்ய ஆணையர் முன் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணஙக 19.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த.புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s Cubic infosystems , Villupuram | 0.72 | 0.21% குறைவு |
| 2 | M/s Om Vinayaga Computer, Villupuram | 0.72 | 7.61% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:-</u>
1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Cubic infosystems , Villupuram ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.21 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

<u>கோ.எண் 134/2021/இ1</u>

14. இந்நகராட்சியில் பாதுகா;ப்பு நலன்கருதி 5 இடங்களில் கண்காணிப்பு கேமிராக்கள் (CCTV) பொறுத்தப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத நிலையில் அதனை சரிசெய்தும் மற்றும் புதிய கேமிராக்கள் பொருத்தும் பணிக்கு ஆணையர் முன் அனுமதி முன் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணஙக 19.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த.புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s GRK Computers, Cuddalore. | 0.82 | 0.03% குறைவு |
| 2 | M/s Mahaa Systems, Cuddalore | 0.82 | 23.85% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:-</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s GRK Computers, Cuddalore ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.03 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

<u>கோ.எண் 1404/2021/இ1</u>

15. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல்33 வார்டு பகுதிகளில் உள்ள 1600 எண்ணிக்கையிலான 40 W குழல் மின் விளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிக்கான ஒப்பந்ததாரரின் பணி ஆணையை நகரமன்ற தீர்மான எண். 742 நாள். 30.07.2021 அன்று ரத்து செய்ததை தொடர்ந்து தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் இந்நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தால் வெளி பணியாளர்கள் (out sourcing) ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு ஒயர்மேன் மற்றும் உதவியாளர்களை பணியில் அமர்த்தி பணி மேற்கொள்ள (Labour Only) தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.90/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணிக்கு ஆணையரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1477/2021/இ2**

16. இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் உள்ள 1600 எண்ணிக்கையிலான 40 W குழல் தெரு மின் விளக்குகளை ஆறு மாத காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு (Labour Only) ஆணையர் முன் அனுமதி முன் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த.புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. ஆர்.நவநீதம்,<br>கடலூர் | ரூ. 4.90 | 0.15% குறைவு |
| 2 | M/s. மஹாலட்சுமி எண்டர்பிரைசஸ்,<br>செங்கல்பட்டு. | ரூ. 4.90 | 0.53% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:-** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஆர்.நவநீதம், கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.1 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1477/2021/இ1**

17. இந்நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 33 வரையுள்ள பொதுமக்களுக்கு பல்வேறு கொள்ளளவு 18 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் அத்தியாவசிய பணிக்கு போதிய பணியாளர்கள் (Tank Operators) இல்லாததால் இந்நகராட்சி மூலம் காலை மற்றும் மாலை இருவேளை குடிநீர் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யும் பணிக்கு ஆணையர் முன் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த.புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு. வி.சுரேஷ்பாபு,<br>கடலூர் | ரூ. 10.00 | 0.26% அதிகம் |
| 2 | திரு. M.K. ஜோதிமணி,<br>குறிஞ்சிப்பாடி. | ரூ. 10.00 | 0.26% குறைவு |

**அலுவலகக் குறிப்பு:-** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம்.கே.ஜோதிமணி, குறிஞ்சிப்பாடி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.26 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1267/2021/இ1**

18. இந்நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், பலவகைப்பட்ட பி.வி.சி. பைப், ஜி.ஐ. பைப்புகள், யு.ஜி. கேபிள்கள், மின் மோட்டார் காயில் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் பணி மற்றும் கோடை காலங்களில் ஏற்படும் வறட்சியை முன்னிட்டு பொதுமக்களுக்கு சீரான பாதுகாப்பான குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிடவும் 2021–22ம் ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்யும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 715 நாள். 30.06.2021 நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு. M.K. ஜோதிமணி,குறிஞ்சிப்பாடி. | ரூ. 10.00 | 0.53% குறைவு |
| 2 | M/s. பாரத் & கோ, கடலூர் | ரூ. 10.00 | 0.89% அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம்.கே.ஜோதிமணி, குறிஞ்சிப்பாடி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.53 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**<u>கோ.எண் 1266/2021/இ1</u>**

19. இந்நகராட்சியில் வார்டு எண். 32 இருளங்குப்பம் ஆழ்துளை கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு பைப்லைன் அமைத்தல், வார்டு எண்.26 மணி நகர் உரக்கிடங்கிலிருந்து பிரதான குடிநீர் குழாய்க்கு இணைப்பு வழங்குதல் மற்றும் வார்டு எண்.12 செட்டிப்பட்டரை காலனி முதல் அசோக் நகர் வரை குடிநீர் குழாய்அமைத்தல் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 719 நாள். 30.06.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த.புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு. வி.சுரேஷ்பாபு, கடலூர் | ரூ. 10.00 | 0.12% குறைவு |
| 2 | திரு. S.R.V. Constructions, திண்டிவனம். | ரூ. 10.00 | 1.72% அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. வி.சுரேஷ்பாபு, கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.12 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**<u>கோ.எண் 1151/2021/இ2</u>**

20. இந்நகராட்சியில் கடலூர் – சித்தூர் சாலை, கும்பகோணம்–சென்னை சாலை மற்றும் பேருந்து நிலையம் செல்லும் முக்கிய சாலைகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை LED விளக்குகளாக மாற்ற புதியதாக LED விளக்குகள் வாங்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 717 நாள். 30.06.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s, S.R.V.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திண்டிவனம். | ரூ. 10.00 | 0.18% குறைவு |
| 2 | திரு. வி.சுரேஷ்பாபு, கடலூர் | ரூ. 10.00 | 0.94% அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. S.R.V. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.18 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**<u>கோ.எண் 1268/2021/இ1</u>**

21. இந்நகராட்சியில் உள்ள வார்டு எண். 26ல் உள்ள சொள்ளை சபாபதி தெரு பகுதியில் உள்ள பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள சிறுபாலத்தை அகற்றி புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 718 நாள். 30.06.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. மணிமாலா,<br>பண்ருட்டி. | ரூ. 0.60 | 0.05% குறைவு |
| 2 | திரு. வி.சுரேஷ்பாபு,<br>கடலூர் | ரூ. 0.60 | 0.86% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:-** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. மணிமாலா, பண்ருட்டி. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.18 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1269/2021/இ1**

22. இந்நகராட்சியில் உள்ள காந்தி ரோடு, சக்தி ஐ.டி.ஐ மற்றும் பள்ளிக்கு அருகாமையில் உள்ள பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள சிறுபாலத்தை அகற்றி புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 714 நாள். 30.06.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. மணிமாலா, பண்ருட்டி. | ரூ. 4.70 | 0.54% குறைவு |
| 2 | திரு. வி.சுரேஷ்பாபு, கடலூர் | ரூ. 4.70 | 0.87% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:-** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. மணிமாலா, பண்ருட்டி. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.54 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1265/2021/இ1**

23. இந்நகராட்சியில் உள்ள ரத்தினம் பிள்ளை மார்க்கெட் பகுதியில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கழிவறை கட்டிடத்தின் மெயின் Grill Gate, Rolling Sutters, INC பீங்கான்கள், தண்ணீர் குழாய்கள், கட்டிடத்தின் மேல்தளம் WC, தரைதளம், Wall Tiles, கதவுகள் மற்றும் Electrical Wiring ஆகியவை பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளதை சரிசெய்து புதியதாக வண்ணம் பூசி புதுப்பித்தல் பணி மற்றும் நுழைவு வாயிலில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை சீர் செய்தல் ஆகிய மராமத்து பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 740 நாள். 30.07.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.08.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருமதி. செந்தமிழ்செல்வி,<br>விழுப்புரம். | ரூ. 6.00 | 0.23% குறைவு |
| 2 | திரு. வி.சுரேஷ்பாபு,<br>கடலூர் | ரூ. 6.00 | 0.37% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:-** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. செந்தமிழ்செல்வி,விழுப்புரம். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.23 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 1467/2021/இ1**

24. அரசாணை (பல்வகை) எண். 145 நகராட்சி நிர்வாககம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்,இ–1) துறை நாள்.21.09.2011–ன்படி 2021–2022–ம் ஆண்டிற்கு கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூ.75,000/–ஐ செலுத்தவும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 2683/2021/இ1**

25. பண்ணுருட்டி நகராட்சியில் கட்டிட அனுமதி வழங்க கோரி திரு. எஸ்.துரைராஜ் & திருமதி.டி.ஜெயலட்சுமி ஆகியோர் 095/CP/19-20/0000511 நாள். 24.02.2020–ல் நகராட்சியில் மனு செய்துள்ளார். கட்டிட அனுமதி வழங்குவதற்கு கட்டணத் தொகை ரூ.28110/–ஐ நகராட்சி கருவூலத்தில் ரசீது எண். 095/001/1/19–20/0019189 நாள். 05.03.2020–ல் செலுத்தியுள்ளார். மேற்படி கட்டணத் தொகையில் விளம்பரப் பலகை வைப்புத் தொகையாக ரூ.10,000/–ம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் அரசாணை எண். 16–ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 31.01.2020–ல் தமிழ்நாடு கட்டிட விதிகள் 2019, விதி (22) உட்பிரிவு (b)ன்படி ரூ.1500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டில்) கட்டணமாக செலுத்த ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரா் திரு. எஸ்.துரைராஜ் பண்ணுருட்டி செலுத்தப்பட்ட தொகை ரூ. 10,000/–ல் விளம்பரப் பலகை வைப்புத் தொகை ரூ.1500/– போக மீதி ரூ.8500/– திரும்ப வழங்ககோரி 11.03.2020–ல் மனு செய்துள்ளார். எனவே, கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை ரூ. 8500/–ஐ திரு. எஸ்.துரைராஜ் & ஜெயலட்சுமி பண்ணுருட்டி ஆகியோர்களுக்கு முன் அனுமதி பெற்று திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோ.எண். க.வி. 11 / 2020 / எப்1**

26. பண்ணுருட்டி நகராட்சியில் நடைபெற்ற 2020–21ம் ஆண்டு தணிக்கை நடைபெற்று வருகிறது. அதற்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிக்கான ஆண்டு கணக்குகள் தயார் செய்யவும் சொத்து வரி, தொழில்வரி மற்றும் குடிநீர் வரி மற்றும் குடிநீர் வரி வைப்புத்தொகை, முன்பணம் போன்ற கணக்குகள் தயார் செய்து ஆண்டு கணக்குடன் ஒத்திசைவு செய்து தர ஆதல் சொல்யூஷன் நிறுவனர் திரு.ஜி.தனசேகர் என்பவருக்கு ரூ.55,000/– நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**கோ.எண் /2021/பி1**

27. பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் அறையில் உள்ள கழிப்பறையில் Water Closet, Wash Basin மற்றும் தண்ணீர் வசதி சரி செய்யவும், புதியதாக டேபிள் மற்றும் சேர்கள் வாங்கவும், புதியதாக டைல்ஸ் பதிக்கவும் மற்றும் வண்ணம் பூசி புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு எண். 15ன் கீழ் 02.03.2021 அன்று அனுமதி அளித்ததையடுத்து ஒப்பந்ததாரரால் மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ. 4,84,133/–ஐ மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**கோ. எண். 482 / இ1 / 2021**

28. பண்ணுருட்டி நகராட்சியில் 2020–2021ம் ஆண்டு தணிக்கை நடைபெற்று வருவதால் தணிக்கையரின் அறுவுரையின்படி சொத்து வரி, தொழில் வரி, குத்தகை இனம் மற்றும் குடிநீர் கட்டணம், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க பதிவேடுகள் கணிணியில் இருந்து கேட்பு (ம) நிலுவைப் பதிவேடு பிரிண்ட் எடுத்து அதனை பைண்டிங் செய்யப்பட்டதிற்கும், நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திட ரூ.50,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**கோ.எண்.**

29. பண்ணுருட்டி நகராட்சி வார்டு எண். 19 போலீஸ் லைன் பகுதி மற்றும் தண்டுப்பாளையம் பகுதியில் பழுதடைந்த பயனற்ற நிலையில் உள்ள வடிகால் வாய்க்காலை அகற்றி புதியதாக மழைநீர் வடிகால் வசதி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ. 4.85 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோ. எண். 2020 / இ1 / 2021**

30. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17 நேதாஜி நகர் பகுதியில் பழுதடைந்த சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் வசதியினை அகற்றி புதியதாக 2 சிறுபாலங்கள் மற்றும் சுமார் 100 மீ நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால் வசதி கட்ட உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ. எண். 2295 / இ1 / 2021**

31. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரை உள்ள சாலைகளின் தற்போதைய நிலை (நீளம், அகலம் மற்றும் சாய்வு நிலை) மற்றும் பருவமழை காலங்களில் பல்வேறு பகுதிகளில் தேங்கும் மழைநீரை அருகில் உள்ள வாலாஜா கால்வாய் மற்றும் கெடிலம் ஆற்றில் முறையாக வெளியேற்றம் செய்ய (Disposal Point) அதற்குரிய Lavel–கள் ஆகியவற்றை கண்டறியவும் மற்றும் இந்நகராட்சி சாலையில் உள்ள சிறுபாலங்கள் மற்றும் இதர விபரங்கள் வரைபடத்தின் மூலம் பெற கலந்தாலோசகர் நியமனம் செய்து மேற்கண்ட விவரங்கள் பெற மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை தொலைநோக்கு திட்டம் 2031ன் கீழ் புதுப்பிக்கவும் மற்றும் சீரமைக்கவும் கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்து சாலைகள் வகைப்படுத்துதல் மற்றும் மழைநீர் வடிகால் வசதி மேற்கொள்ள தேவையான அளவீடுகள் வரைபடத்துடன் கூடிய அறிக்கை சமர்பிக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ. எண். 2340 / இ1 / 2021**

32. இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–21 வார்டு எண். 33, திருவதிகை , டி.ராசாப்பாளையம் காலனி மயானப்பாதை தார்சாலை அமைத்தல் பணிக்கு நகரமன்ற தீர்மான எண். 700 நாள். 31.05.2021 அன்று நகரமன்றம் அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 27.07.2021 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s. S.R.V. Constructions,<br>திண்டிவனம். | ரூ. 25.00 | 0.21% குறைவு |
| 2 | M/s. Bharath & Co<br>கடலூர். | ரூ. 25.00 | 2. 73% அதிகம் |
| 3 | திருமதி. செந்தமிழ்செல்வி,<br>விழுப்புரம். | ரூ. 25.00 | 7. 89% அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>** 1. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. S.R.V. Constructions, திண்டிவனம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.21 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மனறம் அனுமதிக்கலாம்.

**<u>கோ.எண் 354 / 2021 / இ1</u>**

33. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 பகுதிகளில் உள்ள 1600 எண்ணிக்கையிலான 440 வாட்ஸ் குழல்மின் விளக்குகளை 6 மாத காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன்கருதியும் மேற்கண்ட பணிக்கான 440 Watts குழல் விளக்குகள், Choke, Starter மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/– இலட்சத்திற்கு (மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>கோ.எண் 2080 / 2021 / இ2</u>**

34. பண்ணுருட்டி நகராட்சி வார்டு வார்டு எண்.01 மாரியம்மன் கோவில் தெரு, வி.ஆண்டிக்குப்பம் பகுதியில் உள்ள சுமார் 40 ஆண்டுகள் பழைமையான ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மிகவும் சிதிலம் அடைந்து உள்ளதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் அவர்களிடமிருந்து மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் உறுதித்தன்மை சான்று பெற்றதன் அடிப்படையில் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை பாதுகாப்பான முறையில் இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,15,000/–யை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>கோ.எண் 1520 / 2021 / இ2</u>**

35. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் சுமார் 20 இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மின் மோட்டார் ரூம், அதன் உட்புறம் உள்ள மீட்டர் போர்டு, பேனல் போர்டு, பியூஸ்

கேரியர், ஸ்டார்ட்டர் மற்றும் சர்வீஸ் ஒயர்கள் சேதம் மற்றும் பழுதடைந்து உள்ளதால் அதனை பழுது நீக்கி புனரமைப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோ.எண் 1600 / 2021 / இ1**

இடம் : பண்ணுருட்டி நகராட்சி
நாள் : 31.08.2021

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி